சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO.677/2019

மனுதாரர் / எதிர்மனுதாரர் ம.சா.1வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.V.தனம் அவர்களால் 44/1969 பிரிவின்படி 16.11.2023 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | பூபதி | கிராமம் : | |
| த/பெ : | பெரியசாமி | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

**முதல் விசாரணை**

நான் தனியார் நிறுவனத்தின் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல சம்மன் வந்ததன் பெயரில் நான் ஆஜராகியுள்ளேன். நான் விபத்து சமயத்தில் எனக்கு சொந்தமான இருசக்கர வாகனம் ஓட்டி சென்றேன். மனுதாரர் என் வாகனத்தின் பின்னால் அமர்ந்திருந்தார். விபத்து சமயத்தில் நான் கிழமேல் ரோட்டில் கிழக்கில் இருந்து மேற்காக தெற்கு ஓரமாக சென்றுக்கொண்டிருந்தேன் அப்போது எதிரில் வந்த அடையாளம் தெரியாத வாகனம் வலது புறமாக ஏறிவந்து எனது இருசக்கர வாகனத்தில் மோதி நிற்காமல் சென்றுவிட்டது. இந்த விபத்திற்கு யார் மீது தவறு என்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அடையாளம் தெரியாத அந்த வாகனத்தின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. என் பின்னால் அமர்ந்து வந்த மனுதாரர் எனக்கு தெரிந்த நபர் எங்கள் ஊரை சேர்ந்தவர். அந்த குற்ற வழக்கின் மேல் நடவடிக்கை பற்றி எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை**

சம்பவ சமயத்தில் நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனம் எனக்க சொந்தமானது அந்த இருசக்கர வாகனம் 2ம் எதிர் மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் முறையாக காப்பீடு செய்யப்பட்டு காப்பீடு அமலில் இருந்தது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனக்கு முறையாக ஓட்டுநர் உரிமம் இருந்தது. விபத்து சமயத்தில் நானும் எனது இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும் அஜக்கிரதையாகவும் ஓட்டி சென்றேன் என்றால் சரிதான். நான் விபத்து சமயத்தில் கவனமாக வாகனம் ஓட்டிருந்ததால் இந்த விபத்தை தவிர்த்து இருக்கலாம் என்றால் சரிதான். எனது இருசக்கர வாகனத்திற்கான காப்பீடு முழுமையான காப்பீடு என்பதால் மனுதாரருக்கு எனது காப்பீடு நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>**

நான் அதிவேகமாகவும் அஜக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் இருசக்கர வாகனம் ஓட்டியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டதாக காவல் துறையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் எழுத்துபுருவமாக காவல் துறையில் ஏதுவும் கொடுக்கவில்லை. எனது பின்னால் அமர்ந்து வந்த மனுதாரர் தான் இந்த விபத்து சம்பந்தமாக காவல் துறையில் புகார் கொடுத்துள்ளார். மனுதாரரை நான் மருத்துவமனையில் சேர்க்கவில்லை மனுதாரரின் புகார் பற்றி எனக்கு தெரியும் அந்த புகாரில் என் மீது தவறு இருப்பதாக அவர் குறிப்பிடவில்லை. குற்றம் அடையாளம் தெரியாத வாகனத்தின் ஓட்டுநர் மீது என்பதால் என் பின்னால் அமர்ந்து வந்த மனுதாரருக்கு நஷ்டஈடு கிடைக்க வேண்டும் என்பதற்காக எனது கவனகுறைவால் விபத்து ஏற்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம் / பூபதி

ஒம்/ சண்முக கனி,
சார்பு நீதிபதி,
குளித்தலை.